**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 205/2019**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் RW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | ஜெயக்குமார் |
| த.க.பெயர் | சச்சிதானந்தம் |
| கிராமம் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பெருந்துறை |
| மாவட்டம் | |
| வயது | 52 |

**எம.சா.1 நாள் 24.10.2025**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் பெருந்துறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றுகிறேன். இவ்வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்து, சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. என்னை இவ்வழக்கில் ஆஜராகி ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கடிதம் கொடுத்துள்ளார் அதனை தாக்கல் செய்கிறேன். அந்த கடிதம் எமசாஆ 1. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்தில் சம்பந்தப்பட்ட Omni Car TN 56 4573 வாகனத்திற்கு ஆய்வின்போது தகுதி சான்று இல்லை. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனத்தின் உரிமையாளருக்கு வாகன தணிக்கை அறிக்கை வழங்கினார். அந்த தணிக்கை அறிக்கை எமசாஆ 2. அதன் அடிப்படையில் வாகனத்தின் உரிமையாளர் அபராதம் செலுத்தினார். அபராதம் செலுத்திய ரசீது எமசாஆ 3. மேலும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எமசாஆ 4. வாகனத்தின் பதிவு விவரம்

எமசாஆ 5 மற்றும் 6 ஆகியவற்றை முன்னிலைபடுத்திகிறேன். இது குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய கடிதம் எமசாஆ 7.

குறுக்கு விசாரணை ( மனுதாரர் தரப்பில்)

நான் கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஆவணங்களில் விடுபட்டிருந்தால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆம்னி கார் ஆய்வின்போது காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். நாங்கள் சரிவர ஆவணங்களை பரிசீலிக்காமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.24 15:56:25 +0530

Subordinate Judge,
Perundurai.

**uploaded by SS**